


# சி.என். ஜானகி

சென்னையின் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்



மருத்துவ உதவி என்று சொன்னவுடன்,
எப்போதும் நம் நினைவில் வருவது - மருத்துவமனை,
மருத்துவ மையம், மருந்தகம், முதலுதவி வண்டி,
மருத்துவர்கள் மட்டுமே! மிகவும் அரிதாக தான்
நாம் செவிலியர்கள் சமூகம் பற்றி நினைப்போம்.
மிக அமைதியாக திரைக்கு பின்னாலிருந்து உழைக்கும்
இந்த செவிலியர்கள், உண்மையிலேயே மருத்துவ
உதவித் துறையின் முதுகெலும்பாவர்.
ஒவ்வொரு வெற்றிகரமான அறுவைச் சிகிச்சை,
அவசர உதவி, உடல் நலம்பேணுதலில் உதவி,
உடல் நலம் தேற உதவி, வீட்டு மருத்துவ உதவி,
வெளிநோயாளர் உதவி என அனைத்திலும்
உறுதுணையாய் இருப்பது செவிலியர்கள் தாம்.
ஒரு மருத்துவமனையோ, காப்பகமோ செவிலியர்கள்
இல்லாமல் இயங்க முடியாது. இவர்கள் இல்லாத
ஒரு மருத்துவமனையை நினைத்தும் பார்க்க முடியாது.
நோயாளிகளின் வெறுப்பையும், கோபத்தையும்
தங்களின் புன்சிரிப்பால் தாங்குவதும்,
தம் துக்கத்தை மறைத்து, நோயாளிகளுக்கும்
அவர்களின் குடும்பத்துக்கும் அவர்களின்
சுமைகளை இறக்கி வைக்கத்தம் தோள் கொடுப்பதும்,
நோயாளிகளுக்கு ஏதேனும் நேரும் போது
குற்ற உணர்வில் தவிப்பதும், அவர்கள் நலமுற்றால்
மகிழ்வதும், அவசர தேவையின் போது
உறுதுணையாக இருப்பதும் இவர்களே!!!

ஒரு உயிரைக் காத்தால், நீ ஒரு கதாநாயகன்;
ஓராயிரம் உயிரைக் காத்தால், நீ ஒரு செவிலியன்
என்ற சொற்றொடர் செவிலியர்களின்
முக்கியத்துவத்தை சொல்கிறது.

கோயம்புத்தூர் நாராயணன் ஜானகி
5 அடி உயரம் இருக்கும், 75 வயது பெண்மணி.
பொறுமை, அக்கறை, கடமை, தொழில் மீது
ஆர்வம் கொண்ட ஒரு செவிலிப் பெண்.
இங்கு குறிப்பிட்டுள்ள மேற்கோளுக்கிணங்க,
புற்றுநோயால் வாடிய எண்ணற்ற நோயாளிகளுக்கு
மிக உதவியாக இருந்தவர். அவருடைய
56 வருட பணித்துறை வாழ்க்கையில்,
செவிலியராக இருப்பதே அவர் கொண்ட
தலையாய கடமை, பொறுப்பு, பணி,
ஈடுபாடு ஆகும்.

1941, ஜனவரி மாதம் 26 ஆம் தேதி அன்று பிறந்த
செவிலிப் பெண் ஜானகி, பிறந்த 6 மாதத்திலேயே தம்
பெற்றோரை இழந்தார். பின் 12 வயது வரை தன்
பாட்டியாலும், அண்ணனாலும் வளர்க்கப்பட்டு
1953-ல், அவ்வை விடுதியில் சேர்க்கப்பட்டார்.
சமுதாயத்தின் வறுமைக் கோட்டுக்குக் கீழிருக்கும்
பெண்களுக்காக நடத்தப்படும் இந்தப் பள்ளியில்,
1959-ல் தன் பள்ளிப் படிப்பை முடித்தார்.
பள்ளிபடிப்பை முடித்த கையோடு,
புற்றுநோய் ஸ்தாபனத்தில் உதவி பணியாளராக
சேர்ந்தார். அப்போது செவிலியராக பணிபுரிவதே
தனக்கான, தனக்கேற்ற பணி என்பதை உணர்ந்தார்.

அவரின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் பார்த்த
மறைந்த மருத்துவர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தியும்,
தற்போதைய தலைமைப் பொறுப்பாளர் மருத்துவர்
சாந்தா அவர்களும், அவரை செவிலிப் பணியில்
முறைப்படி பயிற்சி எடுக்குமாறு ஊக்கப்படுத்தினர்.
1961-1964 க்கு இடையே அரசு ஸ்டான்லி
மருத்துவமனையில், 'உடல் நலம் குன்றியவரைப்
பேண செவிலிப்பணி' எனும் பயிற்சியை ஜானகி
முடித்தார். இதைத் தொடர்ந்து, புற்றுநோய்
ஸ்தாபனத்துக்கு திரும்பி வந்த ஜானகி, தலைமை
செவிலியராக நியமிக்கப்பட்டார்.

அச்சம், நிச்சயமின்மை, காத்திருத்தல்,
எதிர்ப்பார்த்திருத்தல், பயம் ஆகியவை
நோயாளிகளுக்கு மற்ற எதையும் விட கெடுதல்
செய்பவை - ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்

செவிலிப் பெண்ணாக ஜானகியின் முக்கியப்
பொறுப்பு நோயுற்றவர்களை தன் கவனிப்பில்
அவர்களின் நலம் பேணுதல் ஆகும். இதற்காக
மருத்துவர்களிடமும், தன்னுடன் பணிபுரியும்
இதர செவிலிப் பெண்களிடமும் சேர்ந்து வேலை
செய்ய வேண்டியதாக இருந்தது. கூர்ந்து கவனிக்கும்
திறன் கொண்ட ஜானகி, நோயாளிகள் தமக்கு
அனுதாபப்பட வேண்டும் எனவும், தம் கஷ்டத்தைப்
புரிந்து கொள்ள வேண்டும் எனவும்
எதிர்பார்க்கின்றனர் என்பதை உணர்ந்தார்.
'நோயாளிகள் தமக்கு என்ன பிரச்னை,
எப்போது சரியாகும் என்பதை தெரிந்துக் கொள்ள
கவலையுடன் காணப்படுவர். அவர்களை
அமைதிப்படுத்தி, நம்பிக்கைக் கொடுத்து,
நோயை எதிர்கொள்ள ஊக்கப்படுத்துவதே
செவிலியராக நம் கடமை' என்று ஜானகி சொல்கிறார்.

அவரின் இனிமையான அணுகுமுறையும்,
அக்கறையான பேச்சும் நோயாளிகளின் மன
அழுத்தத்தையும், கவலையையும் வெகுவாக





குறைத்தது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் நோயாளிகளைப் பார்த்ததில், நோயாளிகளிடமும், அவரின் வேலைக்குமான ஈடுபாடு இன்னும் அதிகரித்தது. அது ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்த பணி என்று நம்பினார். இந்த துறையில் அவர் கொண்ட ஈடுபாட்டால், வாழ்நாள் முழுவதும் தனிமையில் வாழ முடிவு செய்தார்.

எவ்வளவு செய்கிறோம் என்பதை விட, எவ்வளவு விருப்பத்தோடு செய்கிறோம் என்பது முக்கியம் - அன்னை தெரசா

1975-ல், செவிலிய மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெற்று 28 வருடங்கள் பணிபுரிந்தார். ஆயிரக்கணக்கில் நோயாளிகளும், நூற்றுக்கணக்கில் செவிலியர்களும் இருக்கும் ஒரு மருத்துவமனையில், செவிலிய மேற்பார்வையாளர் பொறுப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நோயாளிகளைப் பராமரிப்பதுடன், தன் கீழ் பணிபுரியும் இதர செவிலியர்களுக்கு வேலைக்கு வரும்நேரம் குறித்தல், அவர்களின் நலன் பேணுதல், மருத்துவர்களின் வேலைக்கு உதவுவதல் ஆகியவைகளையும் செய்து வந்தார். ஜானகி தன் பொறுப்பைத் திறம்பட செய்ததில், அங்கு இருக்கும் மருத்துவர்கள், உடன் வேலை செய்யும் செவிலியர்கள், நிர்வாகத்தினர், முக்கியமாக நோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் என அனைவரின் மரியாதைக்கும், அன்புக்கும் பாத்திரமாக விளங்கினார்.

2004-ல், ஜானகி மறுபடியும் பதவி உயர்வு பெற்றார். ஏற்கனவே செய்து கொண்டிருந்த வேலைகளோடு, மருத்துவமனையில் வேலை பார்க்கும் அனைத்து ஊழியர்களின் நலன் காக்கும் பணியையும் மேற்கொண்டார். ஜானகி தம் எல்லா வேலைகளையும் முழுமையான ஆர்வத்தோடு திறமையாகவும், மிகுந்த அக்கறையோடும் செய்தார்.

2009-ல், தன் 40 வருட நீண்ட கால சேவைக்குப் பின் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால் இது நிறுவனப் பதிவுக்குத் தான். தன் முதுவயதை முன்னிட்டு பணி நேரத்தைக் குறைத்து பகுதி நேர பணியாளராக காலை 6 லிருந்து மதியம் 2 வரை இன்றும் வேலை பார்க்கிறார். மருத்துவ வளாகத்திலேயே தங்கி இருக்கும் அவர் பல சமயம் மருத்துவமனையை கண்காணிக்க விறுவிறுப்பாக, மிடுக்காக நடந்து வருவதைக் காணலாம்.

துயரம் சூழ்ந்த அந்த இடத்தில், அவரைச் சந்தித்தது நமக்குப் புத்துணர்ச்சியை கொடுத்ததோடு, நம்முள் ஒரு உற்சாகமும், உத்வேகமும் பரவியதை மறுக்க முடியாது. தன் வேலை மீது பெருமையும், பற்றும் கொண்டுள்ள ஜானகி இருள் சூழ்ந்த கடலில் கலங்கரை விளக்கமாக உயர்ந்து நிற்பதோடு, நம்முடைய ப்ளாரன்ஸ் நைட்டிங்கேலாக, நமக்கு ஒரு முன் மாதிரியாக, சென்னையின் தலை சிறந்தவர்களில் ஒருவராக விளங்குகிறார்.
செவிலியர் ஜானகிக்கு நன்றிகள் பல.